சி.சி. 25/2021 அ.சா. 1 வேணு த/பெ. பெருமாள் வயது 72 14.05.2024.

<u>(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)</u>

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் 10ம் வகுப்பு வரை பயின்றுள்ளேன். 29.06.2017ல் சண்டை நடைபெற்றது. இதைகுறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மருத்துவமனையில் புகார் பெறப்பட்டது. நான் சொல்ல சொல்ல போலீசார் புகார் வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலமானது அடிபட்ட மறுநாள் காலை பெறப்பட்டது. என்னிடம் வாக்குமூலத்தை படித்து காண்பித்த பின்புதான் போலீசார் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் சண்டை நடந்தது 28.06.2017 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்திலுள்ள தேதியானது 29.06.2017 தான் உள்ளது அதில் அடித்தல் திருத்தல் எதுவும் இல்லை. அடித்தல் திருத்தல் புகார் வாக்குமூலத்தில் இருந்தால் அது நான் கொடுத்த புகார் வாக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலத்தில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் இல்லை. தேதி புகார் வாக்குமூலத்தில் திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் பிறந்த சகோதர, சகோதரியுடன் பாகப்பிரிவினை ஏற்பட்டது.

நான் சண்டை போட்ட தேதியிலிருந்து சுமார் 16 வருடத்திற்கு முன்பு பாகப்பிரிவினை எனது தந்தையால் முச்சிலிக்காவல் பிரித்து கொடுக்கப்பட்டது. அந்த முச்சிலிக்காவை போலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளேனா என்றால் இல்லை. முச்சிலிக்கா எழுதப்பட்ட வருடம் எனக்கு நினைவில்லை. எனது தந்தை தனிப்பட்ட முறையில் சொத்து எதையும் அவருக்காக வைத்துக்கொண்டாரா என்றால் இல்லை. எனது தந்தை எனது மகனுக்கு வீட்டை எப்போது செட்டில்மென்ட் செய்து கொடுத்தார் என்றால் அது நினைவில்லை. 25.03.2013ம் தேதி என்னுடைய மகன் பெயரில் செனட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த செனட்டில்மென்ட ஆவணத்தில் எழுதிகொடுக்கப்பட்டது வீடு ஆகும் என்றால் சரிதான்.

எனது தந்தை மற்ற பேரப் பிள்ளைகளுக்கும் சொத்து எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

கோபிக்கு எனது தந்தை சென்ட்மென்ட் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எனது சகோதரிகளுக்கும் சென்ட்மெண்ட் தானம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சென்ட்மெணட் செய்ததை ரத்து செய்யகோரி வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எந்த நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் போலீஸ் வாக்குமூலத்தில் 1ம் எதிரி அடித்து பல் விழுந்ததாக வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வலது பக்க பல் விழுந்ததாக சொன்னேன். நான் மருத்துவரிடம் ஒரு பல் விழுந்துவிட்டதாக சொல்லியுள்ளேன். ஆனால் ஏற்கனவே எனக்கு 10 பல் விழுந்துவிட்டு இருப்பதாக கூறியுள்ளார் என்றால் அது தவறு.

நான் பிரச்சனை சம்மந்தமாக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்ந்த சமயம் மருத்துவரிடம் இரு நபர்கள் அடித்ததாக கூறியுள்ளேன். ஆனால் மருத்துவரிடம் தெரிந்த மூன்று நபர் அடித்ததாக மருத்துவரிடம் கூறியிருப்பதாக எழுதியுள்ளதாக ஆங்கிலத்தில் இருப்பதால் அது எனக்கு தெரியாது. என் தந்தை கோபி என்பவருக்கு தானா சென்டில்மென்ட் கொடுத்த பிறகு என் தந்தையை கோபி தான் அடித்து கொன்றுவிட்டார் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதன்பேரில் என்னையும் எதிரியையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சென்னை உயர் நீதிமன்றத்தில் சிபிசிஐடி மூலம் விசாரித்த மனு தள்ளுபடி ஆகிவிட்டதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கோபிக்கு எனது தந்தை சொத்து கொடுத்துவிட்டார் என்று காரணமாக நான் எதிரியின் மீது தவறான வழக்குகளை தொடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிசிஐடி விசாரணையில் எனது தாயார் கோபி அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்று சொல்லி வாக்குமூலம் கொடுத்தது பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது ஆனால் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நிகழும் பொழுது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் தோராயமாக சுமார் 100 நபர்கள் இருந்திருப்பார்கள். சண்டையானது வீட்டிற்குள்ளே நிகழ்ந்தது. வீட்டிற்கு வெளியே சண்டை நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வீட்டிலிருந்து என்னை அடித்து வெளியே இழுத்து வந்தார். நான் போலீசிடம் வாக்குமூலத்தில் கோபி என்னை வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். 2ம் எதிரி ஜெயவேல் என்பவர் எதுவும் செய்யவில்லை

என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் எட்டி உதைத்தார். ஜெயவேல் என்பவர் சுமார் 100 கிலோ இருப்பாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் ஜெயவேல் என்பவரை அன்றைக்கு தான் பார்த்தேன். ஜெயவேல் என்பவர் குண்டாக உள்ளார். ஜெயவேல் என்பவர் குணடாக இருப்பவர் காலை தூக்கி உதைத்தார் என்று கூறுவது சரியல்ல.

சண்டை சம்மந்தமாக என் ஊர்காரரர்கள் சுமார் 100 நபர்கள் பார்த்தார்கள் என்று நான் போலீஸ் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி 100 நபர்களும் நாங்கள் சண்டை போடும் போது யாரும் விலக்கிவிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி 100 நபர்களுக்கு ஊர்காரரர்களுக்கு விரோதமாக இருக்கிறேன் என்றால் அவ்வாறு இல்லை. சிபிசிஐடி வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் ஆகிவிட்டதால் அதற்காக இன்னொரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே விழுந்த பல்லின் மீது எதிரி அடித்து விட்டதாக தவறாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மருத்துவர் எனக்கு 10 பற்கள் இல்லை என சான்றிதழ் வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தவறாக நிகழாத சம்பவத்தை நிகழ்ந்ததாக கூறியுள்ளதால் தான் மருத்துவரிடம் 3 நபர்கள் அடித்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் மருத்துவர் என்னிடம் விசாரிக்கவில்லை. நான் பல் விழுந்ததை மட்டும் தான் மருத்துவரிடம் காண்பித்தேன். பல்லை நான் எடுத்து வந்தேனா என்று மருத்துவர் கேட்டால் சம்பவ இடத்தில் மயங்கி விழுந்ததால் என்னால் எடுக்க முடியவில்லை என்று மருத்துவரிடம் கூறினேன்.

கட்டையால் அடித்ததாக சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரிதான், என்னை எதிரி தாக்கியதாக சொல்லப்படும் கத்தியை போலிசாரிடம் ஒப்படைதிருக்கீறீர்களா என்றால் ஒப்படைத்திருக்கிறேன். மீண்டும் சாட்சி நான் ஒப்படைக்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். அவ்வாறு தான் கத்தியால் எதிரிகள் எதுவும் தாக்காத நிலையில் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நிகழ்ந்ததாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை 1ம் எதிரி மீது சொத்தை எழுதிவிட்டார் என்ற ஆதங்கத்தில் பொய்யான புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் ஆகையால் எதிரிக்கும் இவ்வழக்கிற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) வேணு

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.